இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 328 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 23 – சனிக்கிழமை 08 ஜூலை 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 328 : Thiruvalluvar Year - 2054 - Aani 23 - Saturday 08 July 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## பா.ஜ.க.வை எதிர்த்தால் - சர்வாதிகார ஆட்சி நடத்தும் ஒன்றிய அரசு

# அமலாக்கத்துறை - சி.பி.ஐ. மூலம் மிரட்டும்!

## டாக்டர் ஜெய.இராஜமூர்த்தி இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூலை 8-**

**சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில், நேற்று முன்தினம் நடைபெற்ற - இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளின் இயக்குநர் டாக்டர் ஜெய.இராஜமூர்த்தி இல்ல மணவிழாவைத் தலைமையேற்று நடத்திவைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "பா.ஜ.க.வை எதிர்த்தால் - சர்வாதிகார ஆட்சி நடத்தும் ஒன்றிய அரசு, அமலாக்கத்துறை - சி.பி.ஐ. மூலம் மிரட்டும்" என்று குறிப்பிட்டார்.**

சென்னை - அண்ணா அறிவாலயத்தில் நேற்று (06.07.2023) காலை, நடைபெற்ற இ.எஸ்.ஐ. மருத்துமனை இயக்குநர் மரு. ஜெய. ராஜமூர்த்தி அவர்கள் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

நினைவில் வாழும் என்னுடைய பெருமதிப்பிற்குரிய மாமா ஜெயராமன் அவர்களுடைய அருமைப் பேரனும், என்னுடைய மைத்துனர் மருத்துவர் ராஜமூர்த்தி அவர்களுடைய அருமைச் செல்வன் சாரங்கராஜன் என்கிற சஞ்சய் அவர்களுக்கும், சுப. சரவணன் - திருமதி. உமாராணி ஆகியோருடைய அருமை மகள் கீர்த்தனா அவர்களுக்கும் நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு இந்த மணவிழா நிகழ்ச்சி நடந்தேறியிருக்கிறது.

இந்த மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்று, மணவிழாவை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் நன்றி சொல்கிறேன்.

**எனது குடும்ப ஆதங்கம் குறைத்திட்ட இனிய விழா!**

வாய்ப்பினைத் தந்த மணமக்களுக்கும், மணமக்களுடைய குடும்பத்தாருக்கும் நான் என்னுடைய வணக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். வழக்கமாகத் தொடர்ந்து பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுகிற காரணத்தால், பெரும்பாலும் குடும்பத்தாரோடு அதிக நேரம் எங்களைப் போன்றவர்கள் செலவு செய்ய முடியாது என்கிற ஒரு ஆதங்கம் எல்லோர் குடும்பத்திலும், குறிப்பாக கழகக் குடும்பத்தில் இருக்கும் அனைவருக்கும் உண்டு. என்னுடைய குடும்பத்திற்கும் நிச்சயம் இருக்கும். ஆனால் இந்தத் திருமணத்தின் மூலமாக ஓரளவிற்கு அந்த ஆதங்கம் குறைந்திருக்கும் என நான் கருதுகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.7.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தனது மைத்துனரும் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளின் இயக்குநருமான டாக்டர் ஜெய. இராஜமூர்த்தி அவர்களின் மகன் இரா.சாரங்கராஜன் (எ) சஞ்சய் – ச.கீர்த்தனா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி சாந்தா ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, எஸ்.ஜெகத்ரட்சகன் உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, சமூக நீதி கண்காணிப்புக் குழு தலைவர் சுப. வீரபாண்டியன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## பா.ஜ.க.வை எதிர்ப்பவர்களைத் துன்புறுத்தவே பொது சிவில் சட்டம்!

இருந்தாலும் எல்லோரும் சொல்வது போல இது ஒரு கழகக் குடும்பம். திராவிட முன்னேற்றக் கழகத்தை அறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிய நேரத்தில், 'தம்பி' என்று எல்லோரையும் விளித்து ஒரு குடும்பப் பாச உணர்வோடு, அதைத்தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்கள் அனைவரையும் 'உடன் பிறப்பே' என்று விளித்து ஒரு குடும்பப் பாச உணர்வோடு நம்மையெல்லாம் உருவாக்கி இருக்கிறார்கள். எனவே என்னைப் பொறுத்தவரையில் இதுவும் ஒரு கழகக் குடும்பம் என்று அந்த நிலையில் தான் இந்த மணவிழா நிகழ்ச்சியில் பங்கேற்று, மணவிழாவிற்குத் தலைமையேற்று, மணவிழாவை நடத்தி வைத்து உங்கள் அனைவரின் சார்பில் மணமக்களை நானும் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

**எனது மைத்துனர் டாக்டர் இராஜமூர்த்தி ஒரு பன்முகத் திறமையாளர்!**

நம்முடைய மணமகனுடைய தந்தை - என்னுடைய மைத்துனர் டாக்டர். ராஜமூர்த்தி அவர்களுடைய சிறப்புகளை - பெருமைகளை இங்கு உரையாற்றியவர்கள் அத்தனை பேரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர் திராவிட இயக்கத்திற்காக, தமிழினத்திற்காக, தமிழ்ச் சமுதாயத்திற்காக என்னென்ன பணிகளை எல்லாம் ஆற்றிக் கொண்டிருக்கிறார் என்பதைப் பற்றி சுருக்கமாகச் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். நான் ஒரு பட்டியலோடு வந்திருக்கிறேன். அவர் ஒரு பன்முகத்திறமையாளராக இருக்கக் கூடியவர்.

படிப்பில் மிக மிக ஒரு கெட்டிக்காரராக, 1982-இல் சிபாரிசின் அடிப்படையில் அல்ல, மதிப்பெண் பெற்ற அடிப்படையில் எம்.பி.பி.எஸ். படிப்பில் சேர்ந்து, இன்றைக்கு ஒரு சிறந்த மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்.

குழந்தை நல மருத்துவராக, ESI மருத்துவமனையின் இயக்குனராக, தமிழ்ப் பற்றுக் கொண்டவராக, முற்போக்குச் சிந்தனைகொண்டவராக, பட்டிமன்றப்பேச்சாளராக, இலக்கியச் சொற்பொழிவாளராக,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## அ.தி.மு.க. ஊழல் அமைச்சர்களைக் காப்பாற்ற

# "கோப்புகளே வரவில்லை" என்று ஆளுநர் மறைப்பதா?

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டன அறிக்கை!

**சென்னை, ஜூலை 8–**

**அளுநர் மாளிகையின் கோப்புகளை பெற்றுக் கொண்டு பெற்றுக் கொண்டதற்கு ஒப்புதலும் அளித்து விட்டு முன்னாள் அதிமுக ஊழல் அமைச்சர்களை காப்பாற்ற "கோப்புகளே வரவில்லை"என்று தமிழ்நாடு ஆளுநர் மறைப்பதா? என்று சட்ட அமைச்சர் எஸ். ரகுபதி கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

முன்னாள் அதிமுக அமைச்சர்கள் மீதுள்ள ஊழல் வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை துவக்குவதற்கு தேவையான இசைவு ஆணையை விரைந்து அனுப்புமாறும், மாநில அரசு நிறைவேற்றி அனுப்பியுள்ள சட்ட மசோதாக்களுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறும் தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு 3.7.2023 அன்று கடிதம் எழுதியிருந்தேன்.

அக்கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக 6.7.2023 அன்று வெளியிடப்பட்டுள்ள ராஜ்பவன் பத்திரிக்கை செய்தியில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தேன். முன்னாள் அதிமுக அமைச்சர் கே.சி.வீரமணி மீதான ஊழல் வழக்கு தொடர்பாக உறுதி படுத்தப்பட்ட விசாரணை அறிக்கை கிடைக்கப்பெறவில்லை என்றும், முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜய பாஸ்கர் ஊழல் வழக்கிற்கு இசைவாணை கேட்டு எந்த கோரிக்கையும் ஆளுநர் மாளிகையில் இருந்து பெறப்படவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**ஆளுநர் அலுவலகத்துக்கு அழகல்ல!**

ஆனால் உண்மை என்னவென்றால் முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணியின் ஊழல் வழக்கு விசாரணையின் கோப்பு மொத்தமாக ஆளுநருக்கு 12.9.2022 அன்றே அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. அந்த கோப்பில் லஞ்ச ஒழிப்புத்துறையின் இறுதி விசாரணை அறிக்கை, விழிப்புணர்வு ஆணையத்தின் பரிந்துரை அனைத்தும் அடங்கியிருக்கிறது. 298 நாட்களுக்கு முன்பு உறுதிசெய்யப்பட்ட இறுதி விசாரணை அறிக்கையை பெற்றுக் கொண்டு கோப்பை பெற்றுக் கொண்டற்கான ஒப்புதல் கையெழுத்தும் போட்டு விட்டு இன்று உறுதி செய்யப்பட்ட விசாரணை அறிக்கை கிடைக்கவில்லை என்று கூறுவது ஆளுநர் அலுவலகத்திற்கு அழகல்ல. ராஜ்பவன் வாதப்படி வைத்துக் கொண்டால் கூட நான் ஆளுநருக்கு கடிதம் எழுதும் வரை அந்த கோப்பு குறித்து எந்த விவரமோ, விளக்கமோ கேட்டு தமிழ்நாடு ஆளுநரிடமிருந்து கடிதமும் வரவில்லை. அமைச்சர் செந்தில்பாலாஜி விஷயத்தில் இவ்வளவு வேகமாக அவரை நீக்க வேண்டும் என்று கடிதம் எழுதிய ஆளுநர் ஊழல் வழக்கின் நீதிமன்ற விசாரணையை தொடர அனுமதிக்காமல் இசைவாணையை நிறுத்தி வைத்து ஏன் இப்போது ஆதாரமற்ற ஒரு காரணத்தைச் சொல்கிறார் என்பதும் தெரியவில்லை.



**ராஜ்பவன் செய்தி வியப்பாக உள்ளது!**

இது மட்டுமின்றி அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஊழல் வழக்கில் இசைவாணை கோரி லஞ்ச ஒழிப்புத்துறையின் இறுதி விசாரணை அறிக்கை, விஜிலென்ஸ் ஆணையத்தின் பரிந்துரை ஆகியவை அடங்கிய ஒரிஜினல் கோப்பு ஆளுநருக்கு 15.5.2023 அன்றே அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. அந்த கோப்பை பெற்றுக் கொண்டதற்கு ராஜ்பவன் ஒப்புதல் கடிதமும் அளித்துள்ளது. நிர்வாக நடைமுறைப்படி அனுப்பி வைக்கப் பட்ட அந்த கோப்பு ராஜ்பவனுக்கு வரவில்லை என்று 53 நாட்கள் கழித்து ராஜ்பவன் வெளியிட்டிருக்கும் செய்தி வியப்பாகவும் விந்தையாகவும் இருக்கிறது. ஆளுநர் அரசியல் சட்டப்படியான பணிகள் செய்வதை கைவிட்டு கட்சி அரசியல் பணிகளை மட்டுமே செய்து கொண்டிருக்கிறார் என்பதையே தனது அலுவலகத்திற்கு வந்த கோப்பையே வரவில்லை என்று சொல்ல வைத்திருக்கிறது என்பதே உண்மை என்று தெரிகிறது. அல்லது ராஜ்பவன் அலுவலகம் ஆளுநரின் கட்டுப்பாட்டில் இல்லையா என்ற கேள்வியை எழுப்புகிறது.

ராஜ்பவன் பத்திரிக்கை செய்தி ஆதாரமற்றது என்பதை எல்லாம் ஆதாரத்துடன் விளக்கி முன்னாள் அமைச்சர்கள் டாக்டர். சி.விஜயபாஸ்கர், ரமணா ஆகியோருக்கு எதிரான குட்கா ஊழல் வழக்கில் நீதிமன்ற விசாரணையை துவக்குவதற்கு தேவையான இசைவு ஆணையை விரைந்து வழங்குமாறு சி.பி.ஐ. அமைப்பிடம் இருந்து 30.6.2023 அன்று மாநில அரசுக்கு வந்துள்ள கடிதம் பற்றிய விவரத்தையும் எடுத்துக் கூறி முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களுக்கு எதிரான ஊழல் வழக்குகளில் இசைவாணை வழங்குவதை மேலும் காலதாமதம் செய்யாமல் உடனடியாக வழங்கிடுமாறு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் இன்று கடிதம் எழுதியிருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## தேனி நாடாளுமன்றத் தொகுதி எம்.பி.

# ரவீந்திரநாத்தின் வெற்றி செல்லாது!

## சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

*சென்னை, ஜூலை 8-*

*வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து ரவீந்திரநாத் வெற்றி பெற்றுள்ளார் என்று மனுதாரர் மிலானி தனது மனுவில் கூறியிருந்தார். வழக்கை விசாரணைக்கு ஏற்கக்கூடாது என்றும் ரவீந்திரநாத் நிராகரிப்பு மனுவை தாக்கல் செய்திருந்தார். கடந்த 2019ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில், தேனி தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட ரவீந்திரநாத் வெற்றி பெற்றார். அவர் தனது வேட்புமனுவில், சொத்து விவரங்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை மறைத்துள்ளார். எனவே, தேனி தொகுதியில் அவர் வெற்றி பெற்றதை செல்லாது என அறிவிக்ககோரி தேனி தொகுதி வாக்காளரான மிலானி என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.*

*அந்த மனுவில், வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து ரவீந்திரநாத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார் என்றும் அவர் தனது மனுவில் கூறியிருந்தார். ஆனால் இந்த தேர்தல் வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல என்றும், வழக்கை விசாரணைக்கு ஏற்கக்கூடாது என்றும் ரவீந்திரநாத் நிராகரிப்பு மனுவை தாக்கல் செய்திருந்தார்.*

*இந்த வழக்கின் விசாரணை நிறைவடைந்த நிலையில் உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது. அப்போது ரவீந்திரநாத்தின் வெற்றி செல்லாது என நீதிபதி உத்தரவிட்டார்.*